ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2159/64 - 2020 ජනවාරි මස 25 වැනි සෙනසුරාදා - 2020.01.25

*2159/64 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்காகச் செயலணியொன்றை நிறுவுதல்.

1. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
   ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்
2. திரு.வி.சிவஞானசோதி அவர்கள்
   ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர்
3. பேராசிரியர் எச்.என்.டப்ளிவ்.ஆரியரத்ன ஹேரத் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்
4. பேராசிரியர் சிரந்த ஹீன்கெந்த அவர்கள்
   களனி பல்கலைக்கழகம்
5. கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
6. திரு.நிமல் அபேசிறி
   ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர்
7. வைத்தியர் அநுருத்த பாதெணிய
   மருத்துவ நிபுணர்

1A - G 31846 — 392 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

8. வைத்தியர் (திருமதி) சஞ்ஜீவனி ஹபுகொட
மருத்துவ நிபுணர்

9. திரு.சுமேத பெரேரா
ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால்

10. திருமதி கயாத்திரி குணருவன்
இலங்கை வர்த்தகச் சபை

11. திரு.சஞ்ஜீவ குணவர்த்தன
நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ.டப்ளிவ். கிறீசி மற்றும் கம்பனி

12. திரு.சமந்த குமாரசிங்க
தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

கடந்த காலகட்டத்திற்குள் உள்நாட்டுப் பொருளாதார சக்திகள், சர்வதேசக் கோட்பாடுகளுள் தகுந்தவாறு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாமையினாலும் கிராமிய மக்கள், பெருந்தோட்டச் சமூகம் மற்றும் குறைந்த வருமானம் பெறும் நகரப்புற மக்களின் நிபுணத்துவங்கள், திறன்கள் மற்றும் விசேட ஆற்றல்களைப்போன்று பலவீனங்கள் மற்றும் சவால்கள் உரியவாறு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாமையினாலும் அம்மக்கள் எதிர்பார்ப்பற்ற நிலையை அடைந்துள்ளார்கள் என்பதன்மீது அரசின் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாதலாலும்,

மேலும், "கிராமத்துடன் கலந்துரையாடல்" மற்றும் "சுபீட்சத்தின் நோக்கு" ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கும்போது கிராமிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் அசௌகரியங்கள், பிரச்சினைகள் மற்றும் பின்னடைவுகள் முதலியன அம் மக்களின் கருத்துக்கள் ஊடாகச் சீரான முறையில் இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

உலகப் பொருளாதாரப் போக்குகளுள் வருங்காலத்தில் இலங்கை அடையவேண்டிய பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி இலக்குகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அபிலாசைகளைப் போன்று வறுமை மற்றும் வறியவர் செல்வந்தர் என்னும் இடைவெளி அதிகரிக்கும் போக்கு என்பன தற்கால அரசினால் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

பாதுகாப்பானதும் சுபீட்சமானதுமான தேசமொன்றுக்காகச் சொல்லப்பட்ட பொருளாதார இலக்குகளை அடையும் போது வறுமையானது மிகவும் முக்கியமான பின்னோக்கிய காரணி என்பதால் மக்கள் மையமான பொருளாதாரமொன்றை அடிப்படையாகக் கொண்ட கிராமிய சமூகத்தை வலுவூட்டும் மூலோபாயங்களின் தேவைப்பாடு எழுந்துள்ளதாதலாலும்,

"சுபீட்சத்தின் நோக்கு" அரச கொள்கையின்மூலம் "பாதுகாப்பான நாடு", "சுபீட்சமான தேசம்", "உற்பத்தித்திறன்மிக்க பிரசை", "மகிழ்ச்சியாக வாழும் குடும்பம்" எனும் தொனிப்பொருட்களின்கீழ் ஒரே நோக்கத்தினுள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகச் செயற்படும் தெளிவான ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாதலாலும்,

கல்விசார் வசதிகளை விஸ்தரித்து மாணவர்களின் நிபுணத்துவங்கள் மற்றும் திறன்களை முன்னேற்றும் வேலைத் திட்டத்தைப்போன்று மக்களின் சுகாதாரம், உணவுப் பாவனை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாதலாலும்,

மத்திய அரசின் அமைச்சுக்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் என்ற வகையில் தாபித்துள்ள அரச பொறிமுறையினூடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்துறைகளை உயிர்ப்பித்து கிராமிய, பெருந்தோட்ட மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களைத் தொழில் முயற்சியாளர்களாகத் தேசியரீதியில் பொருளாதாரத்தை வலுவூட்டும் செயற்பாட்டுக்கு நேரடியாக இணைத்துக் கொள்ளக்கூடியவாறு வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்கள் ஊடாக நிதி ஏற்பாடுகளை அணுகக்கூடிய வாய்ப்புக்களை விரிவாக்கி புதிய அணுகுமுறையொன்றைத் தாபித்தல் இன்றியமையாததாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்துக்கொண்டு மேற்குறிப்பிட்ட தங்களை அதாவது,

1. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
   ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்
2. திரு.வி.சிவஞானசோதி அவர்கள்
   ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர்
3. பேராசிரியர் எச்.என்.டப்ளிவ்.ஆரியரத்ன ஹேரத் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்
4. பேராசிரியர் சிரந்த ஹீன்கெந்த அவர்கள்
   களனி பல்கலைக்கழகம்
5. கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
6. திரு.நிமல் அபேசிறி
   ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர்
7. வைத்தியர் அநுருத்த பாதெணிய
   மருத்துவ நிபுணர்
8. வைத்தியர் (திருமதி) சஞ்ஜீவனீ ஹபுகொட
   மருத்துவ நிபுணர்
9. திரு.சுமேத பெரேரா
   ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால்
10. திருமதி கயாத்திரி குணருவன்
    இலங்கை வர்த்தகச் சபை
11. திரு.சஞ்ஜீவ குணவர்த்தன
    நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ.டப்ளிவ். கிறீசி மற்றும் கம்பனி
12. திரு.சமந்த குமாரசிங்க
    தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

ஆகிய தங்களை வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்காகத் தாபிக்கப்படும் செயலணியின் உறுப்பினர்களாக இத்தால் நியமிப்பதுடன் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக எனது ஆணையாளர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

(அ) சமுர்த்தி நலன்பெறுநர்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உணவு வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்

(ஆ) அதற்காக உணவு வகைகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக லங்கா சதொச, சதொச, கூட்டுறவுத் தொகுதி மற்றும் மாக்பெட் நிறுவனம் என்பவற்றை ஒருங்கிணைத்தல்

(இ) மேற்குறிப்பிட்ட இருப்பு வலையமைப்பின் ஊடாக மலிவு விலையில் உணவு மற்றும் ஏனைய பொருட்களை வழங்குவதற்காக உள்நாட்டு வழங்குநர்களை ஊக்குவித்தலும் மற்றும் உயிரூட்டுதலும்

(ஈ) லங்கா சத்தோச, கோப்-பெட் மற்றும் மாக்-பெட் எனும் நிறுவனங்களினூடாக வழங்கல் வலையமைப்பை விஸ்தரிப்பதற்காக கீழ்மட்டத்தில் அதிகாரம் பெற்றுள்ள வர்த்தக வலையமைப்பொன்றை ஏற்படுத்துதலும் மற்றும் அதில் பெண்களின் தொழில்முயற்சிக்கு முன்னுரிமை வழங்குதலும்

(உ) ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்திற்காக அடையாளம் கண்டுள்ள ஒரு இலட்சம் வறிய குடும்பங்களுக்காக நிலையான வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக பல்நோக்கு செயலணியுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல்.

(ஊ) முக்கியமாக கிராமிய, பெருந்தோட்ட மற்றும் பகுதி நாகரீக பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் பண்புத்தரமான வீதித்தொகுதிகளை வழங்குவதற்காக ஒரு இலட்சம் கிலோமீற்றர் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை பெருந்தெருக்கள் அமைச்சு, மாகாணசபைகள் மற்றும் பிரதேச சபைகளின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளல்.

(எ) கிராமிய, தோட்ட, அரை நகர பிரதேச மக்களைத் திருப்திப்படுத்துமுகமாக 150,000 நீர்வழங்கல் வசதிகளைப்

பெற்றுக்கொடுப்பதை உறுதிசெய்யும் நோக்கில் நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் நீர்வழங்கல் சபையுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.

(ஏ) சிறிய அளவிலான தொழில் அபிவிருத்தி, சுயதொழில், உள்ளக கைத்தொழில் அபிவிருத்தி தொடக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கி வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் சமூகங்களுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு, பிரதேச அபிவிருத்தி வங்கி, சமுர்த்தி வங்கி, கூட்டுறவு வங்கிகள், வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் நுண்பாக நிதி நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகொண்டு குறைந்த வருமானம் பெறும் மக்கள் நிதிவசதி பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தல்

(ஐ) வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களிடையே இனங்காணப்பட்ட கமத்தொழில் மற்றும் தொழில் அபிவிருத்திக்காக முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் நீண்டகால குத்தகை அனுமதிப்பத்திரங்கள் ஒரு இலட்சத்தினை வழங்குவதற்காக காணி அமைச்சு, காணி ஆணையாளர் திணைக்களம் மற்றும் "பிம்சவிய" நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்

(ஒ) அடிமட்டத்தின் சேவை வழங்கல்களை அச் சமூகத்தினர் இலகுவாக பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ஒருகிணைத்தல்

(ஓ) காட்டு யானை அச்சுறுத்தல்களிலிருந்து கிராமங்கள் மற்றும் விவசாயக் காணிகளை பாதுகாப்பதற்காக வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுதல்

(ஔ) தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும் தாபனரீதியான சமூகப் பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை (CSR) இயன்றளவில் வறுமையை ஒழிக்கும் தேசிய வேலைத் திட்டத்துடன் இணைப்பதற்கும் தேவையான நடவடிக்கையை எடுத்தல்

(க) பல்வேறு சர்வதேச வங்கிகள் மற்றும் நிதியங்களினால் வழங்கப்படும் நிதி ஏற்பாடுகளை இவ் வேலைத் திட்டத்தை வெற்றிபெறச் செய்யக்கூடியதாகப் பயன்படுத்துவதற்காகத் தொடர்புடைய நிறுவங்களும் ஒன்றிணைந்து செயற்படுதல்

மேலும், எஸ்.பீ.திவாரத்ன அவர்களை செயலணியின் தலைவராக நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய பரிசீலனைகளை மேற்கொள்ளுவதற்கும் மற்றும் விடயங்களை விசாரணை செய்வதற்கும் தேவையான ஆலோசனைகளை வெளியிடுவதற்காக வறுமை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணியிடம் நான் இத்தால் அதிகாரத்தையளிக்கின்றேன்.

மேலும், வறுமை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஆதரவு கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் வழங்குகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிட்ட செயலணி தமது உத்தியோகபூர்வ கட்டளையை ஒருவருட காலத்திற்குள் பூர்த்திசெய்து என்னிடம் அறிக்கையிட வேண்டுமென இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.